வெற்றி வாகை சூட

வெற்றிக்கு வழி

# 12ஆம் வகுப்பு

# கணக்குபதிவியல்

# முதல் திருப்புதல் தேர்வு-2023

வெவ்வேறு மாவட்ட
வினாத்தாள்களின் தொகுப்பு

WAY TO SUCCESS

# kanchipuram District

R KANCHIPURAM

# முதலாம் திருப்புதல் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | கணக்குபதிவியல் | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்:- 20×1=20

1) தொடக்கநிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
அ) தொடக்க முதல் கண்டறிய ஆ) இறுதிமுதல் கண்டறிய
இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

2) கடனாளிகள் தொடக்க இருப்பு ரூ.30000, பெற்ற ரொக்கம் ரூ.100000, கடன்விற்பனை ரூ.90000 கடனாளிகள் இறுதி இருப்பு?
அ) ரூ. 30000 ஆ) ரூ. 130000 இ) ரூ. 40000 ஈ) ரூ. 20000

3) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
அ) பெயரளவுக் கணக்கு ஆ) சொத்து கணக்கு
இ) ஆள்சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

4) உயில்கொடை ஒரு
அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு
இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு

5) கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல்மீது வட்டி
அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

6) பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
அ) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
இ) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
ஈ) இலாபப் பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

7) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது
அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச்சொத்து
இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

8) சராசரி இலாபம் ரூ. 25000 மற்றும் சாதாரண லாபம் ரூ.15000 ஆக இருக்கும்போது, உயர் இலாபம்
அ) ரூ. 25000 ஆ) ரூ. 5000 இ) ரூ. 10000 ஈ) ரூ. 15000

9) மறுமதிப்பீட்டில் சொத்துக்களின் மதிப்பு உயர்வது
அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) செலவு ஈ) இவற்றுள் ஏதுவுமில்லை

10) பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்
அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

11) கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்பு மாற்றப்படுவது
அ) அனைத்து கூட்டாளிகளின் முதல்கணக்கு
ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு
இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

12) A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாபநட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகினார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
அ) 4:3 ஆ) 3:4 இ) 2:1 ஈ) 1:2

13) நிறுமம் கலைப்பின்போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்
அ) அங்கிகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்

14) சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துக்கள் க/கு
இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு

15) நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல்
இ) நிலைச்சொத்துகள் ஈ) நீண்டகாலச் சொத்துகள்

16) ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகால சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
அ) 175 ஆ) 125 இ) 25 ஈ) 100

17) புற-அக பொறுப்புகள் அளவிடுவது
அ) குறுகிய காலக்கடன் தீர்க்கும் திறன் ஆ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்
இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) செயல்திறன்

18) பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துக்களுக்கும் உள்ள விகிதாச்சாரம்
அ) உரிமையாளர் விகிதம் ஆ) முதல் உந்துதிறன் விகிதம்
இ) புற அக பொறுப்பு விகிதம் ஈ) நடப்பு விகிதம்

19) Tallyல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள்?
i) ரொக்கம் ii) இலாப நட்டக் க/கு iii) முதல் க/கு
அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும்
இ) (i) மற்றும் (ii) இவை இரண்டும் ஈ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்

20) Tally-ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?
அ) அனாமத்து க/கு ஆ) கொடுபட வேண்டிய செலவு க/கு
இ) விற்பனை க/கு ஈ) முதலீடுகள் க/கு

## பகுதி - II

**எவையேனும் 7 வினாவிற்கு விடையளி. 30-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×2=14**

21) பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்.

| | ரூ. |
|---|---|
| 2017, ஏப்ரல் 1 அன்று முதல் | 2,50,000 |
| 2018, மார்ச் 31 அன்று முதல் | 2,75,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 15,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | ? |

22) ஆயுள்உறுப்பினர் கட்டணம் - சிறுகுறிப்பு தரவும்.

23) ஜெயராமன் என்ற கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ரூ.10000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும். 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

24) ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:
2014: ரூ. 4000, 2015: ரூ.3000, 2016: ரூ.5000, 2017: ரூ.4500 மற்றும் 2018: ரூ. 3500
5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

25) தியாக விகிதம் என்றால் என்ன?

26) தீனா, சூர்யா மற்றும் ஜானதி என்ற கூட்டாளிகள் 5:3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.03.2018 அன்று தீனா கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின் போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ரூ.50000 காப்பு நிதியினைக் காட்டியது. காப்பு நிதியினை மாற்றுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

27) நடைமுறை முதல் என்றால் என்ன?

28) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்பு பொறுப்புகள் ரூ. 240000, மொத்த நடப்பு சொத்துக்கள் ரூ. 450000, சரக்கிருப்பு ரூ. 70000 முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ரூ. 20000

29) தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

30) விடுபட்ட விவரங்களைக் கொண்டு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை நிறைவு செய்யவும்.

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | ______________ க/கு ப<br>பங்கு விண்ணப்பக் க/கு<br>(விண்ணப்பத் தொகை பெற்றது) | | 200000 | |
| 2. | பங்கு விண்ணப்பக் க/கு ப<br>______________<br>(பங்கு விண்ணப்பத்தொகை பங்குமுதல் க/கு மாற்றப்பட்டது) | | ---- | 200000 |

பகுதி - III

எவையேனும் 7 வினாவிற்கு விடையளிக்கவும்.

40-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும். 7×3=21

31) பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையைக் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 50,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| உள்திருப்பம் | 15,000 |
| வாராக்கடன் | 5,000 |
| 2019- மார்ச் 31 அன்று கடனாளிகள் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,40,000 |

32) பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ரூ. |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டு பொருள் இருப்பு | 16,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருட்கள் | 84,000 |
| 31.03.2019 அன்று விளையாட்டுப் பொருட்கள் இருப்பு | 10,000 |

33) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்

34) நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.

35) அன்பு மற்றும் இராஜீ என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். ரவி என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். அன்பு, இராஜீ மற்றும் ரவி அவர்களின் புதிய இலாபப்பங்கு 5:3:2 தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

36) கூட்டாளி விலகலின்போது செய்யபட வேண்டிய சரிகட்டுதல்களை பட்டியலிடவும்.

37) அனு நிறுமத்தால் ரூ.10 முகமதிப்பில் வெளியிடப்பட்ட நேர்மைப் பங்குகளில், தியாகு என்பவர் வைத்திருந்த 200 நேர்மைப் பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகையான ரூ.3 செலுத்தாத காரணத்தால் அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அப்பங்குகள் ரூ.6 வீதம் கோகுல் என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

38) பின்வரும் விவரங்களிலிருந்து மணி மற்றும் கனி நிறுமங்களின் 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொதுஅளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | மணி நிறுமம் ரூ. | கனி நிறுமம் ரூ. |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 2,50,000 |
| இதர வருமானம் | 30,000 | 25,000 |
| செலவுகள் | 1,10,000 | 1,25,000 |

39) பின்வரும் நிலைகளில் இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

நிலை 1: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.800000
இயக்க இலாபம் ரூ. 200000

நிலை 2: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.200000
இயக்க அடக்கவிலை ரூ.1400000

நிலை 3: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.1000000 மொத்த இலாபம் விற்பனையிலிருந்து பெற்ற வருவாயில் 25%
இயக்கச் செலவுகள் ரூ. 100000

40) Tally ERP9 பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 7×5=35

41) ராஜீ முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு

| விவரம் | 1.1.2018 தொகை | 31.12.2018 தொகை |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ரூ.2500 எடுத்துக் கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாபநட்ட அறிக்கை தயாரிக்கவும்.

(அல்லது)

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து பத்மினி மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | பத்மினி | பத்மா |
|---|---|---|
| 2018 சனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 5,00,000 | 4,00,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 70,000 | 40,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 2,000 | 1,000 |
| 2018ல் இலாபப் பங்கு | 52,000 | 40,000 |
| முதல் மீது வட்டி | 30,000 | 24,000 |
| ஊதியம் | 45,000 | Nil |
| கழிவு | Nil | 21,000 |

42) அ) மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019 மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 15000 | காவலாளிக்குச் சம்பளம் கொடுத்தது | 12000 |
| தொடக்க வங்கி இருப்பு | 25000 | மன்ற ஆண்டு விழாச் செலவுகள் | 15000 |
| நன்கொடைகள் பெற்றது | 48000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16500 |
| பழைய உபகரணங்கள் விற்றது | 26000 | பொழுதுபோக்குச் செலவுகள் | 13500 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 13000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5000 |
| மன்றஆண்டு விழா வசூல் | 18000 | அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள் | 3000 |
| டென்னிஸ் மைதான கட்டுமான செலவுகள் | 7000 | முதலீடுகள் விற்றது | 12000 |
| அறக்கொடை நாடகக்காட்சி வசூல் | 4000 | இறுதி ரொக்க இருப்பு | 12000 |
| வாடகை செலுத்தியது | 1000 | | |

(அல்லது)

ஆ) ஆனந்த் மற்றும் பாலு என்ற கூட்டாளிகள் முறையே 7:3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31 மார்ச் 2018 ஆம் நாளைய அவர்களது இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு

| பொறுப்புகள் | தொகை | தொகை | சொத்துகள் | தொகை |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | நிலம் | 60000 |
| ஆனந்த் | 50000 | | சரக்கிருப்பு | 40000 |
| பாலு | 30000 | 80000 | கடனாளிகள் | 20000 |
| பற்பல கடனீந்தோர் | | 20000 | கைரொக்கம் | 10000 |
| இலாப நட்ட க/கு | | 30000 | | 13000 |

2018 ஏப்ரல் 1ஆம் நாளன்ற அவர்கள் சந்துரு என்பவரை கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு ஒப்புக்கொண்டு 1/4 பங்குக்கு ரூ.20,000 முதலுடன் கூட்டாளியாக கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர்.

அ) சரக்கிருப்பு மதிப்பை ரூ.3000 குறைப்பது

ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.2000 உருவாக்குவது

இ) நிலத்தின் மதிப்பை ரூ.10000 மதிப்பேற்றம் செய்வது

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் முதல் கணக்கினை கூட்டாளி சேர்ப்பிற்குப் பின் தயாரிக்கவும்.

43) அ) ஒரு கூட்டாண்மை நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக ஈட்டிய நிகர இலாபங்கள் பின்வருமாறு.

2016: ரூ. 20000, 2017: ரூ.17000 மற்றும் 2018: ரூ.23,000

மேற்குறிப்பிட்ட காலம் முழுவதும் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட முதல் ரூ. 80000 நிறுவனம் கொண்டுள்ள இடரினைக் கருத்தில் கொண்டு, பயன்படுத்தப்பட்ட முதல் மீதான சாதாரண இலாபவீதம் 15% என கருதப்பட்டது. உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அல்லது)

ஆ) ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையிலிருந்து விலகினார் பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) வளாகத்தின் மதிப்பை ரூ. 40,000 உயர்த்த வேண்டும்

(ii) சரக்கிருப்பு ரூ.3000 இயந்திரம் ரூ.6500 மதிப்பு குறைக்க வேண்டும்

(iii) கொடுபடாச் செலவுகள் ரூ.500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

44) அ) சரண்யா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ரூ.10 வீதம் 20000 நேர்மைப் பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகளுக்கானத் தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ. 3 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ. 4 |
| முதலாம் மற்றும் இறுதி அழைப்பின்போது | ரூ. 4 |

30000 பங்குகளுக்கான தொகை விண்ணப்பத்தின் போது பெறப்பட்டது. கூடுதலான விண்ணப்பத்தொகை திருப்பி உடனடியாக அனுப்பப்பட்டது. இதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அல்லது)

ஆ) தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

45) அ) பின்வரும் விவரங்களிலிருந்து அப்துல் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2015-2016 | 2016-2017 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 300000 | 360000 |
| இதர வருமானம் | 100000 | 60000 |
| செலவுகள் | 200000 | 180000 |
| வருமான வரி | 30% | 30% |

(அல்லது)

ஆ) முழுமை பெறா பதிவேடுகளைப் பராமரித்து வரும் அப்துல் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மாச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

| விவரம் | 1.4.2017 | 31.03.2018 |
|---|---|---|
| சரக்கிருப்பு | 100000 | 50000 |
| பற்பல கடனாளிகள் | 250000 | 350000 |
| ரொக்கம் | 25000 | 40000 |
| அறைகலன் | 10000 | 10000 |
| பற்பல கடனீந்தோர் | 150000 | 175000 |

| பிற விவரங்கள் | தொகை | | தொகை |
|---|---|---|---|
| எடுப்புகள் | 40000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 535000 |
| பெற்ற தள்ளுபடி | 20000 | பல்வகைச் செலவுகள் | 30000 |

அளித்த தள்ளுபடி 250001.4.2017 அன்று முதல் 235000
கடனீந்தோருக்கு அளித்த
ரொக்கம் 450000

46) அ) அருணா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து (i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (ii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் (iii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் (iv) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | 2018 மார்ச் 31 தொகை | 2019 மார்ச் 31 தொகை |
|---|---|---|
| சரக்கிருப்பு | 360000 | 440000 |
| கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 740000 | 660000 |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 190000 | 280000 |
| நிலைச் சொத்துகள் | 600000 | 800000 |

கூடுதல் தகவல்கள்:-

i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.35,00,000
ii) அவ்வாண்டில் கொள்முதல் ரூ. 21,00,000
iii) விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ரூ. 16,00,000

விற்பனை மற்றும் கொள்முதலை கடன் விற்பனை மற்றும் கடன்கொள்முதல் எனக் கொள்ளவும்.

(அல்லது)

ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

47) அ) பின்வரும் விவரங்களைக் கொண்டு பாலை வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வினைக் கணக்கிடவும்.

| விவரம் | இலட்சங்களில் வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
|---|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 250 | 275 | 300 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 100 | 125 | 100 |
| நடப்பு பொறுப்புகள் | 50 | 40 | 80 |
| மொத்தம் | 400 | 440 | 480 |
| II. சொத்துகள் | | | |
| நிலைச் சொத்துகள் | 300 | 360 | 390 |
| நடப்புச் சொத்துகள் | 100 | 80 | 90 |
| மொத்தம் | 400 | 440 | 480 |

(அல்லது)

ஆ) வெற்றி மற்றும் இரஞ்சித் இருவரும் கூட்டாளிகள் அவர்கள் 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களது 31.12.2017 நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | தொகை | தொகை | சொத்துகள் | தொகை |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | அறைகலன் | 25000 |
| வெற்றி | 30000 | | சரக்கிருப்பு | 20000 |
| இரஞ்சித் | 20000 | 50000 | கடனாளிகள் | 10000 |
| காப்பு நிதி | | 5000 | கைரொக்கம் | 35000 |
| பற்பல கடனீந்தோர் | | 45000 | இலாப நட்டக் க/கு (நட்டம்) | 10000 |
| | | 100000 | | 100000 |

பின்வரும் சரிக்கட்டுதல்களில் 1.1.2018 அன்று சூரியா என்பவர் நிறுவனத்தின் புதிய கூட்டாளியாக சேர்கிறார்.

i) சூரியா ¼ இலாபப் பங்கிற்காக ரூ.10000 முதல் கொண்டு வருகிறார்.
ii) சரக்கிருப்பு 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது.
iii) கடனாளிகள் ரூ. 7500 என மதிப்பிடப்படுகிறது.
iv) அறைகலன் மதிப்பு ரூ.40000 என மாற்றி அமைக்கப்படுகிறது.
v) கொடுபட வேண்டிய கூலி ரூ. 4500 இது வரை பதிவு செய்யப்படவில்லை.

புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் நிறுவனத்தின் மறுமதிப்பீடு கணக்கு, கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

*****

MADURAI நாள்: 27.01.2023 மதுரை மாவட்டம்

# திருப்புதல் தேர்வு -1 2023

12 - ஆம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி - I

(20 X 1 =20)

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

1. இறுதி முதல்+ எடுப்புகள் - கூடுதல்முதல்= ?

(அ) சரிக்கட்டப்பட்டதொடக்கமுதல் (ஆ) தொடக்கமுதல் (இ) இலாபம் / நட்டம் (ஈ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்

2. கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பானஎந்த விவரம் மொத்தக்கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது? (அ) செலுத்தற்குரியமாற்றுச்சீட்டின்தொடக்கஇருப்பு

(ஆ) செலுத்தற்குரியமாற்றுச்சீட்டின்இறுதி இருப்பு (இ) அவ்வாண்டில்ஏற்கப்பட்டசெலுத்தற்குரியமாற்றுச்சீட்டு

(ஈ) செலுத்தற்குரியமாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது

3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின்இருப்பு காட்டுவது

(அ) அந்தஆண்டில்ஏற்பட்டநட்டம் (ஆ) அந்தஆண்டின்செலவுகளைக்காட்டிலும் மிகுதியான வருமானம்

(இ) அந்தஆண்டின்மொத்தரொக்கச் செலுத்தல்கள் (ஈ) அந்நாளைய ரொக்கம்மற்றும் வங்கி இருப்பு

4. ஒரு மன்றத்தில்உள்ள 800 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ரூ 100செலுத்துகின்றனர்.நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ரூ 200; முன்கூட்டிப் பெற்ற சந்தாரூ 300. வருவாய் மற்றும் செலவினக்கணக்கில்காட்டப்படவேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.

அ) (ரூ80,200 ஆ) ரூ 80,000 இ) ரூ 79,500 (ஈ) ரூ 79,900

5. கூட்டாளிகளுக்கிடையேகூட்டாண்மைஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி

(அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும் இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

6. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்த பின் உள்ள இலாபம் ரூ 11,000. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவு பெற உரியவராயின் கழிவுத் தொகையைகண்டறியவும்.

(அ) ரூ 500 (ஆ) ரூ 1,100 (இ) ரூ 550 (ஈ) ரூ 1,000

7. 2017- ல் கணக்கேட்டின் படி இலாபம் ரூ 35,000; இலாபத்தில் சேர்ந்துள்ளதிரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ 1,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம் ரூ 2,000 எனில், சரிக்கட்டப்பட்ட இலாபம்

(அ) ரூ 36,000 (ஆ) ரூ 35,000 (இ) ரூ 38,000 (ஈ) ரூ 34,000

8. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?

(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (ஈ) நற்பெயரினைவாங்கமுடியாது

9. கூட்டாளி சேர்ப்பின் போது சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் யாருடைய முதல்கணக்கிற்கு மாற்றப்படுகிறது?

(அ) பழைய கூட்டாளிகள் (ஆ) புதிய கூட்டாளி இ) அனைத்து கூட்டாளிகள் (ஈ) தியாகம்செய்தகூட்டாளிகள்

10. கூட்டாளி சேர்ப்பின்போது புதிய கூட்டாளி நற்பெயருக்காககொண்டு வரும்தொகை, யாருடைய முதல்கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும்?

(அ) அனைத்து கூட்டாளிகள் (ஆ) பழைய கூட்டாளிகள் (இ) புதிய கூட்டாளி (ஈ) தியாகம்செய்தகூட்டாளிகள்

11. கூட்டாளி ஒருவர் ஜுன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும்பொறுப்பாவது

(அ) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும் (ஆ) முந்தையகணக்காண்டின் இறுதி வரைக்கும்

(இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும் (ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும் RM 12 Accountancy P-1



Scanned with CamScanner

12. X, Y மற்றும் Z என்றகூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018 இல் இலாபம் ரூ. 24,000 என்றஅடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரியஇலாபத்தில் X ன் பங்கினைக்கண்டறியவும். (அ) ரூ. 8,000 (ஆ) ரூ. 3,000 (இ) ரூ. 2,000 (ஈ) ரூ.24,000

13.ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
(அ) முகமதிப்பு (ஆ) பெயரளவு மதிப்பு (இ) செலுத்தப்பட்ட தொகை (ஈ) அழைக்கப்பட்ட தொகை

14. முகமதிப்பைவிட அதிகமாகபெற்றதொகைவரவு வைக்கப்படும் கணக்கு
அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு இ) பங்குமுதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

15. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின்ஒரு கருவி அல்ல?
(அ) போக்குப் பகுப்பாய்வு (ஆ) பொது அளவு அறிக்கை (இ) ஒப்பீட்டு அறிக்கை (ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்

16.இருப்புநிலைக்குறிப்பு, வணிகநிறுவனத்தின்நிதிநிலைபற்றிய — தகவல்களைவழங்குகிறது.
(அ) ஒரு காலக்கட்டத்திற்கு மேலான (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
(இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான (ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

17. சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ளநடப்புச் சொத்துகள் அழைக்கப்படுவது (அ) காப்புகள் (ஆ) புலனாகும் சொத்துகள் (இ) நிதி (ஈ) விரைவு சொத்துகள்

18.விற்பனைமூலம் பெற்றவருவாய்க்கான அடக்கவிலைரூ.3,00,000; அவ்வாண்டின் சரக்கிருப்பு ரூ.60,000 எனில்சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (அ) 2 மடங்கு (ஆ) 3 மடங்கு (இ) 6 மடங்கு (ஈ) 5மடங்கு

19. F11 எனும் பயன்பாடு (அ) நிறுவனப்பண்புகூறுகள் (ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
(இ) நிறுவன கட்டமைப்பு (ஈ) இவைகளில் எதுவும் இல்லை

20. அலுவலகப்பயன்பாட்டிற்காக ரூ.25,000 வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது.எந்தவகை சான்றாவணத்தில் இந்தநடவடிக்கைபதியப்படும்? (அ) எதிர்பதிவு சான்றாவணம் (ஆ) பெறுதல்கள்சான்றாவணம்
(இ) செலுத்தல்கள்சான்றாவணம் (ஈ) விற்பனைசான்றாவணம்

பகுதி - II

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்: (வி.எண். 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 X 2 =14)

21. இலாபநோக்கற்ற அமைப்பின் முதலின வரவு நான்கினைத் தரவும்.

22. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

23. நிதி நிலை அறிக்கைகள் யாவை?

24.ஆதாயவிகிதம்என்றால் என்ன?

25.பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்புகள் விகிதம் கணக்கிடவும்:
31.03.2018 அன்றைய இருப்புநிலைக்குறிப்பு (வருவிய)

| விவரம் | ரூ. |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி | |
| (அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்குமுதல் | 1,00,000 |
| (ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 60,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | |
| நீண்டகாலக் கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்) | 80,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) கணக்குகள் மூலம் செலுத்தவேண்டியவைகள், | 50,000 |
| (ஆ) இதர நடப்புப் பொறுப்புகள் | |
| கொடுபடவேண்டிய செலவுகள் | 30,000 |
| மொத்தம் | 3,20,000 |
| | |

RM 12 Accountancy P-2


Scanned with CamScanner

26. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 2,20,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று முதல் | 1,80,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 40,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |

27. 2017, ஜனவரி 1 அன்று அறிவழகன்மற்றும் சீனிவாசன்என்றகூட்டாளிகளின்முதல் கணக்குகள்முறையேரூ. 15,000 மற்றும் ரூ. 10,000 இருப்பினைக் காட்டியது. 2017, ஜூலை 1 அன்று அறிவழகன்கூடுதல் முதலாக ரூ. 5,000 கொண்டு வந்தார் மற்றும் 2017, செப்டம்பர் 1 அன்று சீனிவாசன்கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ. 10,000. 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடவும்.

28. மேரி, மீனாமற்றும் மரியம் எனும் கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் இலாபநட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1-1-2019 அன்று மேரி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளில், அந்நிறுவனத்தின் இருப்புநிலைக்குறிப்பு சொத்துகள் பக்கத்தில் ரூ.75,000 பகிர்ந்துதராநட்டம் எனக்காட்டியது. பகிர்ந்துதராநட்டத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

29. சாராநிறுமம் பங்கொன்று ரூ.10 விதம் 10,000 நேர்மைப்பங்குகளைரூ. 2 முனைமத்தில், விண்ணப்பத்தின்போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. குறிப்பேட்டுப்பதிவுகள் தரவும்.

30. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

பகுதி - III

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் :

(வினா எண்: 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) (7 X 3 = 21)

31. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத போது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932-ன்படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறு குறிப்பு தரவும்.

32. விகிதப் பகுப்பாய்வின்குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.

33. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ளவேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

34. பின்வரும் விவரங்களைக் கொண்டு ஆண்டுத்தொகைமுறையில் நற்பெயரின்மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) பயன்படுத்தப்பட்டமுதல் ரூ. 50,000 (ஆ) சாதாரண இலாபவிகிதம்: 10%

(இ) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின்இலாபங்கள் முறையே ரூ. 13,000, ரூ. 15,000 மற்றும் ரூ. 17,000.

(ஈ) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ரூ. 1 ன்தற்போதைய ஆண்டுத்தொகைமதிப்பு ரூ. 2.4868.

35. சர்மிளா வரையறு நிறுமம் மற்றும் சங்கீதா வரையறு நிறுமத்தின்2109, மார்ச்31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

| விவரம் | சர்மிளாநிறுமம் | சங்கீதாநிறுமம் |
|---|---|---|
| I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 5,00,000 | 11,00,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 4,00,000 | 7,00,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 | 2,00,000 |
| மொத்தம் | 10,00,000 | 20,00,000 |
| II. சொத்துகள் | | |
| நிலைச்சொத்துகள் | 6,50,000 | 18,00,000 |
| நடப்புச்சொத்துகள் | 3,50,000 | 2,00,000 |
| மொத்தம் | 10,00,000 | 20,00,000 |

RM 12 Accountancy P-3



Scanned with CamScanner

36.இரத்னா, பாஸ்கர், மற்றும் இப்ராஹிம் ஆகியகூட்டாளிகள் 2 : 3 : 4 என்றவிகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று இரத்னாஇறந்துவிட்டார். அவருக்குச்செலுத்தவேண்டியஇறுதித் தொகைரூ.1,00,000 வரவு இருப்பினைக்காட்டியது. கீழ்கண்டசூழ்நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அ) சேரவேண்டியத் தொகைஉடனடியாகக்காசோலைமூலம் செலுத்தப்பட்டது

(ஆ) சேரவேண்டியத் தொகைஉடனடியாகச்செலுத்தப்படவில்லை

(இ) ரூ. 60,000 காசோலைமூலம் உடனடியாகச்செலுத்தப்பட்டது .

37. இரத்னகுமார்மற்றும்ஆரோக்கியதாஸ்எனும்கூட்டாளிகள் முறையே3:2 என இலாபநட்டம்பகிர்ந்து வந்தனர். 31 மார்ச் 2017 ஆம்நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 30,000 |
| இரத்ன குமார் | 30,000 | | பொறித்தொகுதி | 60,000 |
| ஆரோக்கியதாஸ் | 50,000 | 80,000 | அறைகலன் | 20,000 |
| இலாபநட்டப் பகிர்வு க/கு | | 20,000 | கடனாளிகள் | 10,000 |
| பொதுக்காப்பு | | 5,000 | சரக்கிருப்பு | 15,000 |
| தொழிலாளர்ஈட்டு நிதி | | 15,000 | வங்கி ரொக்கம் | 15,000 |
| கடனீந்தோர் | | 30,000 | | |
| | | 1,50,000 | | 1,50,000 |

2017, ஏப்ரல்1அன்று, டேவிட்என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். கூட்டாளி சேர்ப்பின் போது பகிர்ந்துதராஇலாபம்மற்றும்காப்பினைபகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

38.ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில்சந்தாமூலம் பெறும் வருவாயைக்கணக்கிடவும். 2018 ஆம் ஆண்டில்சந்தாபெற்றது: ரூ. 45,000.

| விவரம் | 1.1.2018 ரூ. | 31.12.2018 ரூ. |
|---|---|---|
| சந்தாபெறவேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டிப்பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

39. 2019, மார்ச் 31 அன்று தாமஸ் என்பவரின்ஏடுகளிலிருந்து பெறப்பட்டஇருப்புகள்பின்வருமாறு:

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| பற்பலகடனீந்தோர் | 6,00,000 | செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு | 1,20,000 |
| அறைகலன் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| நிலம் மற்றும் கட்டடம் | 3,00,000 | பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 60,000 |
| பற்பலகடனாளிகள் | 3,20,000 | சரக்கிருப்பு | 2,20,000 |

2019, மார்ச் 31 ஆம் நாளையநிலைஅறிக்கைதயாரிக்கவும் மற்றும் அந்நாளையமுதல்கண்டறியவும்.

40.பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக்கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.





Scanned with CamScanner

பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்: (7X 5= 35)

41.(அ)பரணி நிறுமத்தின்பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2016-17<br>ரூ. | 2017-18<br>ரூ. |
|---|---|---|
| விற்பனைமூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

(அல்லது)

(ஆ)நண்பர்கள் கால்பந்து மன்றத்தின்31.03.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து, 31.03.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் ஏடுகளில்2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

| பெறுதல்கள் | ரூ. | ரூ. | செலுத்தல்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ: | | | அறைகலன் | | 7,000 |
| ரொக்கம் | 1,000 | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | | 800 |
| வங்கி | 10,000 | 11,000 | சிறப்பு விருந்து செலவுகள் | | 1,500 |
| சந்தா | | 5,000 | மின்கட்டணம் | | 900 |
| உயில்கொடை | | 6,000 | இருப்பு கீ/இ: | | |
| சிறப்பு விருந்து கட்டண வசூல் | | 2,000 | கைரொக்கம் | 1,800 | |
| | | | வங்கி ரொக்கம் | 12,000 | 13,800 |
| | | 24,000 | | | 24,000 |

கூடுதல் தகவல்கள்:

(i) 2016, ஏப்ரல்1 அன்று மன்றத்திலிருந்தஅறைகலன்ரூ. 12,000. அறைகலன்மீதானதேய்மானம் கணக்கில்கொள்ளவேண்டியதில்லை. (ii) 2016-2017-ல்பெறவேண்டிய சந்தாரூ. 600. (iii) 31.3.2017 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு ரூ.100 (iv) 2016, ஏப்ரல்1 அன்றைய முதல்நிதி ரூ.23,000.

42.(அ) பின்வரும் விவரங்களைக்கொண்டு பாலைவரையறு நிறுமத்தின்போக்குப்பகுப்பாய்வினைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ.இலட்சங்களில் | | |
|---|---|---|---|
| | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 250 | 275 | 300 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 100 | 125 | 100 |
| நடப்புப் பொறுப்புகள் | 50 | 40 | 80 |
| மொத்தம் | 400 | 440 | 480 |
| RM 12 Accountancy P-1 II. சொத்துகள் | | | |
| நிலைச்சொத்துகள் | 300 | 360 | 390 |
| நடப்புச்சொத்துகள் | 100 | 80 | 90 |
| மொத்தம் | 400 | 440 | 480 |





Scanned with CamScanner

(அல்லது)

(ஆ)ஏப்ரல் 1 2017, அன்று அகமது ரூ.92,800 முதலுடன்தன்னுடையதொழிலைத்தொடங்கினார். அவர்முறையானகணக்கேடுகளைபராமரிக்கவில்லை. 31.03.2018 ஆம் நாளையஅவருடையஏடுகளின்விவரங்கள்பின்வருமாறு

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| வங்கி இருப்பு | 18,000 (ப) | பொறித்தொகுதி | 80,000 |
| கைரொக்கம் | 1,500 | அறைகலன் | 40,000 |
| சரக்கிருப்பு | 16,000 | கடனீந்தோர் | 72,000 |
| கடனாளிகள் | 30,000 | | |

அகமது தனது சொந்தப் பயனுக்காக ரூ.40,000 எடுத்துக்கொண்டார். தன்னுடையவியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக அவர்ரூ.16,000 கூடுதல்முதல்கொண்டு வந்தார். கடனாளிகள்மீது 5% ஒதுக்கு உருவாக்கவேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்கப்படவேண்டும். 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரியஇலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

43.(அ)தினேஷ் மற்றும் சுகுமார் 2018, ஜனவரி 1 அன்று கூட்டாண்மைஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். தினேஷ் ரூ.1,50,000 மற்றும் சுகுமார் ரூ.1,20,000 முதலாக கொண்டுவந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

(அ) தினேஷ் மற்றும் சுகுமார் இலாபநட்டங்களை 2:1 என்றவிகிதத்தில் பகிர வேண்டும்.

(ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% தரப்பட வேண்டும்.

(இ) எடுப்புகள்மீதானவட்டி கணக்கிடப்பட வேண்டியது தினேஷ் ரூ. 3,600 மற்றும்சுகுமார் ரூ. 2,200.

(ஈ) தினேஷிற்கு சம்பளம் ஆண்டுக்கு ரூ. 60,000 வழங்கப்பட வேண்டும் மற்றும்

(உ) சுகுமாருக்கு தரப்பட வேண்டிய கழிவு ரூ. 80,000.

2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் வட்டி, சம்பளம் மற்றும் கழிவு போன்றவற்றைசரிக்கட்டுவதற்கு முன்நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ. 2,20,000. இலாபநட்டப்பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும். (அல்லது)

(ஆ)கீழ்க்கண்டநிலைகளில்இயக்கஇலாப விகிதம் காணவும்.

நிலை1: விற்பனைமூலம் பெற்றவருவாய்ரூ.10,00,000, இயக்கஇலாபம் ரூ.1,50,000.

நிலை2: விற்பனைமூலம் பெற்றவருவாய்ரூ.15,00,000, இயக்கஅடக்கம் ரூ.12,00,000,

நிலை3: விற்பனைமூலம் பெற்றவருவாய்ரூ.20,00,000, மொத்தஇலாபம் விற்பனைமூலம் பெற்றவருவாயில்30%, இயக்கச் செலவுகள் ரூ.4,00,000.

44.(அ)பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தவிற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல்1 அன்று கடனாளிகள் | 2,50,000 | உள்திருப்பம் | 50,000 |
| 2018, ஏப்ரல்1 அன்று பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 60,000 | பெறுதற்குரியமாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்றரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரியமாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரியமாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பலகடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்கவிற்பனை | 3,15,000 |

RM 12 Accountancy P-6



Scanned with CamScanner

(அல்லது)

(ஆ) நற்பெயரின்மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) பயன்படுத்தப்பட்டமுதல் : ரூ. 1,20,000

(ஆ) சாதாரண இலாபவிகிதம் : 20%

(இ) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம் :

2014: ரூ. 30,000; 2015: ரூ. 32,000; 2016: ரூ. 35,000; 2017: ரூ. 37,000 மற்றும் 2018: ரூ. 40,000

(ஈ) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ரூ. 2,800.

45.(அ) விணாமற்றும்பியர்ல் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். முறையே2:1 எனும்விகிதத்தில் இலாபம்பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018, மார்ச் 31 ஆம்நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | கட்டடம் | 60,000 |
| விணா60,000 | | இயந்திரம் | 30,000 |
| பியர்ல்40,000 | 1,00,000 | கடனாளிகள் | 20,000 |
| காப்பு நிதி | 30,000 | சரக்கிருப்பு | 10,000 |
| தொழிலாளர்ஈட்டு நிதி | 10,000 | வங்கி ரொக்கம் | 30,000 |
| கடனீந்தோர் | 10,000 | | |
| | 1,50,000 | | 1,50,000 |
| | | | |

01-04-2018 அன்று டெரி என்பவர்பினவரும்நிபந்தனைக்குட்பட்டு கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார்.

(i) விணா, பியர்ல் மற்றும்டெரியின் புதிய இலாபப்பகிர்வு விகிதம்5:3:2 ஆகும்.

(ii) டெரி ரூ. 30,000 முதலாககொண்டு வரவேண்டும்.

(iii) சரக்கிருப்பின் மதிப்பை20% குறைக்க வேண்டும்.

(iv) தொழிலாளர்ஈட்டு நிதி மீது எதிர்பார்க்கப்படும்கோருரிமை ரூ. 1,000.

(v) பதிவுறாமுதலீடுகள் ரூ. 11,000 ஏடுகளில் கொண்டுவரப்படவேண்டும்.

(vi) நிறுவனத்தின் நற்பெயர் ரூ. 30,000 என மதிப்பிடப்பட்டது. டெரி தன்னுடைய நற்பெயரின் பங்கினைரொக்கமாககொண்டுவந்தார். டெரி நற்பெயராகக் கொண்டு வந்ததொகைமுழுவதையும்பழைய கூட்டாளிகள் எடுத்துக் கொண்டனர்.

(VII) மறுமதிப்பீடுஇலாபம் -ரூ.9,000

புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும்இருப்புநிலைக் குறிப்பு தயார்செய்யவும்.

(அல்லது)

(ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

46.(அ)ராஜன் நிறுமம் ரூ.6,00,000 மதிப்புள்ளஇயந்திரத்தைஜெகன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ரூ.10 மதிப்புள்ளமுற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப்பங்குகளைஅவர்களுக்கு செலுத்தவேண்டிய தொகைக்காகவழங்கியது. கீழ்க்கண்ட நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப்பதிவுகளைத்தரவும்.

(i) பங்குகளைமுகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்குகளை50% முனைமத்தில் வெளியிட்டால் (அல்லது)

(ஆ)ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் முத்து, முரளி மற்றும் மனோஜ் என்றகூட்டாளிகள் தங்கள் இலாபத்தினை3 : 1 : 2 என்றவிகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். 2018, டிசம்பர் 31 ஆம் நாளையஅவர்களின் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு:



Scanned with CamScanner

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | இயந்திரம் | 45,000 |
| முத்து 20,000 | | அறைகலன் | 5,000 |
| முரளி25,000 | | கடனாளிகள் | 30,000 |
| மனோஜ்20,000 | 65,000 | சரக்கிருப்பு | 20,000 |
| பொதுக்காப்பு | 6,000 | | |
| கடனீந்தோர் | 29,000 | | |
| | 1,00,000 | | 1,00,000 |

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு 2018, டிசம்பர் 31 அன்று மனோஜ் விலகுகிறார்:

(i) முத்துவும் முரளியும் இலாப நட்டங்களை 3:2 என்றவிகிதத்தில் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

(ii) சொத்துகள் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

இயந்திரம் ரூ.43,000, சரக்கிருப்பு ரூ.27,000, கடனாளிகள் ரூ.28,000.

(iii) நிறுவனத்தின் நற்பெயர் ரூ. 30,000 என மதிப்பிடப்பட்டது.

(iv) மனோஜ் -க்கு செலுத்தவேண்டியஇறுதித் தொகைஉடனடியாகசெலுத்தப்படவில்லை.

மனோஜ் விலகலுக்குப் பின்கூட்டாளிகளின்மறுமதிப்பீடுகணக்குமற்றும்முதல் கணக்கு தயாரிக்கவும்.

47.(அ)கூட்டாண்மைஅடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின்விவரங்கள் பின்வருமாறு:

(அ) ஈட்டிய இலாபங்கள் : 2016: ரூ. 30,000; 2017: ரூ. 29,000 மற்றும் 2018: ரூ. 32,000.

(ஆ) 2016 ஆம் ஆண்டின்இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ. 3,000 சேர்ந்துள்ளது.

(இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டினஇலாபத்தில் ரூ.2,000 குறைக்கப்பட்டது.

(ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ. 5,000 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்றஅடிப்படையில் நற்பெயரின்மதிப்பைக் கணக்கிடவும்.

(அல்லது)

(ஆ) ஜெமினி வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ரூ.10 மதிப்புள்ளரூ.7 அழைக்கப்பட்ட 20 சாதாரண பங்குகளைஒறுப்பிழப்பு செய்தது. மகேஷ்என்பவர்அப்பங்குகளுக்கான விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீடு பணம் ரூ.5 செலுத்தி இருந்தார். அவற்றில் 15 பங்குகள் பங்கொன்றுக்கு ரூ.6 வீதம் பெற்றுக் கொண்டு ரூ.7 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாகநரேஷ்என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப்பதிவுகளைத்தரவும்.

RM 12 Accountancy P-8


Scanned with CamScanner